மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஒரு நிலைமையை எடுத்துச் சொன்னேனே தவிர, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜ் போன்றவர்கள் அதிக அளவில் மக்கள் படிக்கவேண்டுமென்ற காரணத்தால் பள்ளிகளைத் திறந்தார்கள். அவ்வாறு திறக்கின்றபொழுது பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்களைப் பற்றி மதிப்பிடவில்லை. இப்பொழுது தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் அத்தகைய பள்ளிகளுக்கான கட்டிடங்களைக்கட்டி வருகிறோம். இதில் உள்ள கஷ்டம் என்னவென்றால், பள்ளிகளைத் திறக்கும்பொழுது தேவயான கட்டிடங்களையும் கட்டியிருந்தால் உங்களிடத்திலே இப்பொழுது இவ்வளவு சிக்கலிலே மாட்டிக்கொண்டு பதில் சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை.

விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரி.

*வினா எண் 49—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரியில் முதுநிலை பட்டப்படிப்புகள் (M.A., M.Sc., M.Com.) போன்றவைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ). தற்போது அவ்வாறு திட்டம் ஏதும் இல்லை எனினும் 1982–83 இல் புதிய பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு, வகுப்புகள் துவங்க இவ்வாண்டு அக்டோபர் மாத இறுதியில் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். கல்லூரி முதல்வரிடமிருந்து அப்பொழுது விண்ணப்பம் வந்தால் பரிசீலிக்கப்படும்.

முதல் நிலை இரண்டாம் நிலை குற்றவியல் நடுவர் மன்றங்களை ஒருங்கிணைக்கும் திட்டம்.

*வினா எண் 50—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதல்நிலை குற்றவியல் நடுவர் மன்றம் இரண்டாம் நிலை குற்றவியல் நடுவர் மன்றம் ஒருங்கிணைப்பு திட்டம் சம்பந்தமான அரசு ஆணை (G.O.) வழங்கப்பட்டிருக்கிறதா?

(ஆ) இல்லை எனில், உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 5]

மாண்பிமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) ஆம். அத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நீதித்துறை அதிகாரிகளைப் போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும் திட்டம்.

*வினா எண். 52—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தின் நீதிதுத்றை அதிகாரிகள் நியமனத்திற்கு ஆன தேர்வுக்களை போட்டித் தேர்வு (Competitive Examination) மூலம் தேர்ந்தெடுக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்பிமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

[முற் பகல் 9–40]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தினை அமுல்படுத்த இவ்வளவு காலதாமதம் ஏன் ? காலதாமதத்தை உடனடியாகத் தவிர்த்து, மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்பிமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கி ணைப்புத் திட்டத்தின் நோக்கம். செகண்ட் கிளாஸ் அதிகாரத்தை உடைய சப்-மாஜிஸ்டிரேட்டுகளது தரம் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்ஸ் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு, அவர்கள் உரிமையியல் வழக்குகளை நடத்துகின்ற டிஸ்டிரிக்ட் முனிசிப்புக்குச் சமமாகக் கொண்டு வரப்பட்டு (District Munesif cum-Judicial Magistrate) என்ற நிலைக்கு அவர்கள் உயர்த்தப்பட்டு, ஒரே கூரையின் கீழ் (Civi Crimin l with'n criminal *I* and *II* clas; offences) ஆகிய அனைத்து வழக்குகளிலும் மக்களுக்கு நீதி கிட்ட வேண்டும். நெடுந்தொலைவுக்குச் செல்லாமல் அருகிலேயே அவர்களுக்கு நீதி கிட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. அதிலே இருக்கிற